Women's Action Network
WAN

# தோசம்

குரல். 03

மூன்றாம் காலாண்டு - 2011



# எமது
# கோசம்

இன்றைய சூழலில் குடும்பங்களில் பெண்கள் எதிர்கொள்கின்ற மிக முக்கிய பிரச்சினைகளாக பல காணப்படினும் பின்வரும் விடயங்கள் மிகுதியாக வெளித் தெரிகின்றன. அதில் ஒன்று குடும்ப அமைப்பில் பெண்கள் அனுபவிக்கும் வன்முறைகள் மற்றையது பொருளாதாரப் பற்றாக்குறையுடனான வேலை வாய்ப்பின்மை. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவது, காவல்நிலையங்களில் முறையிடுவது போன்றன அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளன. பெண்கள் பொதுவாழ்விலும், குடும்ப வாழ்விலும் பலவகையான பாரபட்சங்களை எதிர்கொள்கின்றனர். இவற்றிலிருந்து விடுபட நினைக்கும் போது அல்லது அவற்றை எதிர்க்கும் போது சமூகத்தில் உள்ள பலதரப்பினரிடமிருந்தும் முரண்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான எதிர்ப்பலைகள் இறுதியில் பெண்களுக்கெதிரான வன்முறைகளாக மாறுகின்றன. அண்மைய காலத்தில் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட பெண்களது மரணங்கள் இதற்கு சான்றாகின்றன.

யுத்தம் நிறைவடைந்த சூழலில் கூட ஆயுதக்கலாசாரம், தேர்தல் வன்செயல்கள், குழுக்களுக்கு இடையேயான முறுகல் நிலை போன்றன பெண்கள் மீது பாரிய தாக்கத்தையும் உயிர்ச்சேதத்தையும் தோற்றுவிக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் எவரும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாது பாதிக்கப்பட்ட பெண்கள் மீதே குற்றம் சுமத்தி வருகின்றனர். இதனால் வன்முறைக்கு உட்பட்டோர் வெளிப்படையாகத் தமது முறைப்பாட்டை முன்வைப்பதற்குத் தயங்குகின்றனர். தற்போதெல்லாம் வெளிநபர்களால் மாத்திரமன்றி குடும்பத்தில் உள்ள ஆண் அங்கத்தவர்களாலேயே அதிகளவில் பெண்கள் மற்றும் சிறுமிகள் வன்முறைக்கு ஆளாவது குறிப்பிடத்தக்கது. இவற்றிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு, உரிய முறையிலான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதோடு இனிவரும் காலங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தடுக்கப்படுவதோடு அவர்களிற்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இல்லையேல் கடந்த சில மாதங்களிலே இடம்பெற்ற பெண்கள் கொலைகள் மற்றும் தற்கொலைகள் போலவே இனிவரும் காலங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமாகவே இருக்கும். ஆகவே குடும்ப அமைப்பில் இடம்பெறுகின்ற பெண்களுக்கெதிரான வன்முறையின் தாக்கத்தையும் அவற்றின் விபரீதத் தன்மையையும் கவனத்தில் கொண்டு உரிய தரப்பினர் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது கட்டாயமானதாகும்.




பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (CEDAW) பற்றிய அறிமுகம் 2



பெண்களுக்கெதிரான ஆணாதிக்கம் என்பது யாது? 4



வடபகுதியில் அடிப்படைத் தேவைகள் இன்றி அல்லலுறும் முஸ்லிம் பெண்கள் 9



பெண்களும் அரசியலும் 16

Published by
Women Action Network, Sri Lanka

# பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (CEDAW) பற்றிய அறிமுகம்

பெண்கள் தமது வாழ்க்கையில் பலவாறான பாரபட்சங்களை எதிர்கொள்கின்றனர். ஆரம்பகாலம் தொடக்கம் இற்றை வரைக்கும் பெண்களை குடும்பம், சமூகம், மதம் போன்றன பலவாறான விதங்களில் கட்டுப்படுத்தியே வருகின்றன. சுயவிருப்பின் பேரில் தமது சொந்த மற்றும் தனிப்பட்ட விடயங்களை நிறைவேற்ற முடியாமலும், தமது அபிவிருத்தி பற்றித் தனித்து முடிவெடுக்க முடியாமலும், ஆதிக்க சக்திகளால் அடிமைப்பட்டிருக்கும் நிலை இன்றளவில் கூட எல்லா இடங்களிலும் மறைந்து விட்டது எனக் கூற முடியாது. ஏனெனில் இன்றும் எம்முன்னே ஆண்களிற்கு சாதகமாகவும் பெண்களுக்கு பாரபட்சமாகவும் பலவாறான விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டே வருவது கண்கூடு. இவ்வாறான பக்கச்சார்பான பாகுபாட்டு நிலையை இல்லாதொழிக்கும் வகையில் பல்வேறு நாடுகளிலும் உள்ள பெண்கள் மற்றும் பெண்கள் அமைப்புகளும் குரல் கொடுத்த வண்ணமே உள்ளனர். அந்தவகையில் பெண்கள் உரிமைகளை மேம்படுத்தவும், பெண்களின் நிலைமைகளைக் கண்காணிக்கவும் 1946 ஆம் ஆண்டில் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையத்தின் 30 வருட உழைப்பின் பயனாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட உடன்படிக்கையே சீடோ உடன்படிக்கையாகும். இது பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையாகும். 1979 ஆம் ஆண்டு மார்கழி 18 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் (United Nations) ஏற்றுக் கொள்ளப்பட்டது. 20 நாடுகள் இந்த உடன்படிக்கையை ஏற்புறுதி செய்த பின்னர் இது சர்வதேச உடன்படிக்கையாக 1981 ஆம் ஆண்டு 3 ஆம் திகதி அமுலுக்கு வந்தது.
இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்ட உறுப்பு நாடுகள் பெண்களுக்கெதிரான அனைத்துவகையான பாரபட்சங்களையும் நீக்குவது குறித்த கொள்கைகளை உருவாக்குதல், அவற்றை முழுமையாக நீக்குதல் போன்றவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை சீடோ குழுவிற்கு அனுப்புவதை ஓர் கடமையாக்குகிறது. சீடோ உடன்படிக்கையை ஏற்றுக் கொண்ட உறுப்பு நாடுகளானவை ஒரு வருடத்திற்குள் பெண்களின் நிலைகுறித்த ஓர் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். இதன் தொடர்சியாக நான்கு வருடத்திற்கு ஒரு முறை இந்த முயற்சியின் விளைவாக ஏற்பட்டுள்ள மாற்றம், எதிர்கொண்ட சவால்கள் மற்றும் மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுகள் குறித்த அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

சீடோ உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் பற்றிப் பார்க்கும் போது, முகவுரையில் பெண்களுக்கெதிரான பாரபட்சங்கள் தற்போதும் பரவலாக நிலவிவருவதைச் சுட்டிக் காட்டுவதுடன், இப்போதுள்ள மனித உரிமைகள் அமைப்பானது பெண்களுக்கான மனித உரிமைகள் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யக் கூடிய சக்தி மிக்கதாக இல்லை என்பதை இது உணர்த்துகிறது. பெண்களுக்கெதிராக பாரபட்சம் காட்டுவது, சமஉரிமை, மனித மான்பிற்குரிய மரியாதை ஆகிய கோட்பாடுகளை அத்துமீறுவதாக உள்ளதென்றும் இது கூறுகின்றது. மேலும் இப்பாரபட்சமானது

ஆண்களைப்போலவே பெண்களும் தமது நாடுகளில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கையில் பங்கேற்பதற்குத் தடையாகவும் அமைகின்றதோடு, சமுதாயம் மற்றும் குடும்பத்தில் வளத்திற்குத் தடையாகவும் மாறிவிடுவதனை விளக்குகின்றது. அத்தோடு ஓர் நாடு நிறைவான முன்னேற்றத்தைப் பெறவும், உலகம் வளம் பெறவும், அமைதி நிலவவும் எல்லாத்துறைகளிலும் ஆண்களுக்கு சமமாகப் பெண்களும் அதிகபட்ச அளவில் பங்கேற்க வேண்டும் என்பதையும் இது வலியுறுத்துகின்றது.

சீடோ உடன்படிக்கையில் 30 உறுப்புரைகள் காணப்படுகின்றன. அதிலே முதலாவது உறுப்புரை பெண்களுக்கெதிரான பாரபட்சத்தை வரையறுக்கின்றது. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அவர்களது மனித உரிமைகள், வாழ்வின் எல்லா அம்சங்களிலும் அடிப்படைச் சுதந்திரம் ஆகியவற்றை பால்வேறுபாடின்றி கிடைப்பதில் தடையாக உள்ள வேற்றுமைகள், தனியாகப் பிரித்து வைத்தல் அல்லது கட்டுப்பாடு ஆகியவற்றை இது உள்ளடக்கியுள்ளது. அத்தோடு குடியுரிமை, அரசியல், பொருளாதாரம், சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளை அனுபவிப்பதிலும், செயற்படுத்துவதிலும் நிலவுகின்ற பாரபட்சத்தை ஒழிப்பதை சீடோவானது அரசுகளிற்கு கட்டாயமாக்குகின்றது. இவற்றோடு பொதுவாழ்க்கை உட்பட்ட குடும்ப வாழ்க்கை, தனிப்பட்ட வாழ்க்கை போன்றவற்றிலும் இப்பாரபட்சத்தை ஒழிப்பதில் அரசுகளை ஈடுபடுத்தல் முதலானவற்றில் இவ்வுடன்படிக்கை செல்வாக்குச் செலுத்துகின்றது.

பெண்களுக்கெதிரான பாரபட்சத்தை சீடோவானது முதலாவது உறுப்புரையில் பின்வருமாறு வரையறை செய்கின்றது. “அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, குடிமை மற்றும் வேறு எந்தத் துறைகளிலும் மனித உரிமைகள், ஆண் - பெண் சமத்துவம் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களில் அங்கீகாரம், உரிமைகளைப் பாதுகாப்பது துய்ப்பது, அல்லது அவற்றை செயல்படுத்துவதில் திருமணமானவர்களாக இருப்பினும் அல்லது ஆகாவிட்டாலும் பெண்கள் என்ற ஒரே காரணத்தினால் கட்டுப்பாடுகளை விதிக்க அல்லது செயலிழக்கச் செய்ய, அந்த நோக்கத்தில் செயற்பட பெண்களை வேற்றுமைப்படுத்திக் காட்டுவது” போன்றவற்றை பெண்களுக்கெதிரான பாரபட்சமாக சீடோ வரையறை செய்கின்றது. இவ்வுடன்படிக்கையில் உள்ள 30 உறுப்புரைகளில் பின்வரும் விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

1. பெண்களுக்கெதிரான பாகுபாடு பற்றிய வரையறை
2. பாகுபாட்டை ஒழிப்பதற்கான கடமைகள்
3. பெண்கள் முன்னேற்றமும் மேம்பாடும்
4. ஆண்கள் பெண்களிடையே சமத்துவத்தை உருவாக்குதல்
5. பாலின பங்கு பணிகளும் மாறாத தன்மையும்
6. மோசடி வஞ்சக் கடத்தல்
7. அரசியல் பங்குபற்றல்
8. சர்வதேச பிரதிநிதித்துவம்
9. தேசியக் குடியுரிமை
10. கல்வி
11. வேலை வாய்ப்பு
12. சுகாதாரம்
13. சமூகப் பொருளாதார நலன்கள்
14. கிராமத்துப் பெண்கள்
15. சட்டத்தின் முன் சமத்துவம்
16. திருமணம் செய்யும் உரிமை
17. நடைமுறையில் இருக்க வேண்டியவை பற்றிக் கூறுகின்றது.

சீடோ உடன்படிக்கையில் கையொப்பமிட்ட நாடுகள் உடன்படிக்கையைத் தேசிய அளவில் நடைமுறைப்படுத்த வைப்பதுடன், இதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் இதில் ஏதும் சிரமங்கள் ஏற்பட்டால் அவை தொடர்பாகவும் அறிக்கை தயாரித்து அனுப்புவது கட்டாயமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரிடம் அளிக்கப்படும் இந்த அறிக்கைகளை சீடோவின் பரிசீலனைக்காக அவர் அனுப்பி வைப்பார். உடன்படிக்கையில் கையொப்பமிட்ட அல்லது ஒப்புக் கொண்ட ஓராண்டு காலத்திற்குள் உடன்படிக்கை விதிகளை நடைமுறைப்படுத்த மேற்கொண்ட சட்டமன்ற, நீதிமன்ற மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பற்றியும் அதில் சந்தித்த தடங்கல்கள் மற்றும் சிரமங்கள் பற்றியும் உறுப்பு நாடுகள் அறிக்கை தயாரித்து அனுப்புவது கடமையாகும். இதன் பின்பு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்ற வீதத்தில் அல்லது சீடோ கேட்டுக்கொள்ளும் போதெல்லாம் அவை இது போன்ற அறிக்கைகளை அனுப்பி வைத்தல் வேண்டும்.

பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையானது (CEDAW) ஒருங்கிணைந்த தன்மை வாய்ந்தது. பெண்களைப் பாதுகாக்கக் கூடியது. அத்தோடு சமத்துவம் என்ற கொள்கையை முன்னிலைப்படுத்துகிறது. பெண்களுக்கு சமவாய்ப்பை, வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. சீடோவானது ஒப்புரவு அதாவது சமநிலையை மையப்படுத்தியுள்ளது. கூடுதலாகப் பெண்களின் நியாயங்களுக்காகக் கருத்துகளை முன்வைப்பதே இதன் சிறப்பம்சமாகும். ●

# பெண்களது அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு தடையாக உள்ள சமூகக் காரணிகள்

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவமானது ஜனநாயகத்தின் பிரதான திறவுகோலாகும். ஆனால் இன்றைய அரசியலில் பெண்கள் சமூகத்தின் வரையறுக்கப்பட்ட கலாசாரத்திற்கும், மேலோங்கிக் கொண்டு வருகின்ற அரசியல் வன்முறைகளிற்கும் பயந்து பின்வாங்குகின்ற, தங்களது உரிமைகளை விட்டுக் கொடுக்கின்ற சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர். பெண்கள் தமது உரிமைகள் மறைமுகமாக மறுக்கப்படுகின்றன என்பதை மறந்து விடுகின்றனர். ஜனநாயக அரசியல் என்பது ஓர் நாட்டில் எல்லோருக்கும் எல்லாம் சமனாகக் கிடைப்பதற்கு வழியமைப்பதாகும். அதாவது கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, அரசியல் உரிமை, பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்பன அவைகளில் சிலவாகும்.

ஆனால் தற்காலத்தில் தமது சுய இலாபத்திற்காகவும், வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காகவும் அரசியலை சில அரசியல்வாதிகள் பயன்படுத்துகிறார்கள். இதனாலேயே தற்காலத்தில் அரசியலில் வன்முறை மேலோங்கியுள்ளது.
ஜனநாயகமான அரசியலிற்கும், பால் சமத்துவத்திற்கும் பெண்களது அரசியல் பங்களிப்பு அவசியமானதாகும். அது பெண்கள் தீர்மானம் எடுக்கும் தருணங்களை இலகுபடுத்துவதுடன் பெண்கள் தொடர்பில் சிறந்த பொறுப்புக் கூறும் தன்மையையும் உறுதிப்படுத்தும். ஆனால் தற்காலத்தில் பெண்களின் அரசியல் முன்னேற்றம் அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை. சட்டமியற்றல், அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பகுதிகள், கொள்கையாக்கல் போன்றவற்றில் பெண்களது பங்குபற்றல் மட்டுப்படுத்தப்படுகின்றது. தீர்மானம் எடுப்பதில் பெண்களை உள்வாங்குவதென்பது அடிப்படை மனித உரிமையாவதுடன் சீடோ சமவாயத்தின் அடிப்படையில் அரசியலுரிமையானது பெண்களுக்கான உரிமைகளில் ஒன்று என்றும் அதற்கான சந்தர்ப்பத்தைப் பெண்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது நாடு இக்குறிப்பிட்ட சீடோ சமவாயத்தில் கையெழுத்திட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் பலதுறைகளில் முன்னேறி இருப்பினும் பல சந்தர்ப்பங்களில் பெண் என்ற பால்நிலை அடிப்படையில் பாரபட்சப்படுத்தப்படுகின்றமை தெரிந்ததே. போக்குவரத்து மற்றும் வேலைத் தளங்களில் பெண்கள் நாளாந்தம் பாலியல் ரீதியான வன்முறைகளுக்கும் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. நாளந்தம் பெண்களது பாதுகாப்புக் கேள்விக்குள்ளாகின்ற இத்தருணத்தில் அதிகாரமானது பெண்களுக்கு வழங்கப்படுமானால் பால்நிலைப் பாகுபாடின்றி பெண்களுக்கான நியாயம் கிடைக்க வாய்ப்புண்டு.

பொதுவாகப் பெண்களின் அரசியல்ப் பங்களிப்பு மட்டுப்படுத்தப்படுகின்றமைக்கான பிரதான காரணமாக பெண்களின் குடும்பப் பொறுப்பானது முன்னிலைப்படுத்தப்படுகின்றது. அதாவது மரபுரீதியான மற்றும் கலாசார ரீதியாக வழங்கப்பட்டுள்ள தாய்மைப் பொறுப்பானது பெண்கள் மீது மட்டுமே சுமத்தப்படுகின்றது. குடும்பத்தில் ஆண்-பெண் இருவரதும் பொறுப்புணர்வும் இன்றியமையாத ஒன்றாகும். அதனைப் பெண்கள் மீது மட்டுமே சுமத்துகின்ற மரபுரீதியான வழமையில் இருந்து ஆண்கள் விடுபடுதல் வேண்டும். பெண் ஆணிற்குள் அடங்கியவள் என்ற சமூகத்தின் மனோ நிலையை ஆண்களே முன்னின்று மாற்றியமைப்பது அவசியமானது.

இவ்விடயம் தவிர பெண்கள் நாட்டின் சமாதான செயற்பாடுகளில் இனரீதியாகவும் சமூக ரீதியாகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளனர். அலுவலக ரீதியான பிரதிநித்துவம் என்பனவும் இதனுள் அடங்கும். ஆனால் இவையாவும் அலட்சியம் செய்யப்படுகின்றது. இலங்கையிலே பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான கோட்டாவை நடைமுறைப்படுத்துவதற்கான விசேட சட்டங்கள் எதுவுமில்லை. அசியல் கட்சிகள் தமது விவகாரங்கள் மற்றும் பிரசாரங்களுக்காகப் பெண்களைத் தமது குறுகிய இலக்கிற்காக அணுகுகின்றன. அவர்களுக்கான அரசியல் வாய்ப்புகளை மற்றும் பங்குபற்றுதலை ஏற்பதில்லை. அத்தோடு அதிகாரப் பகிர்வு மற்றும் பால்நிலை சமத்துவம் என வரும்போது பெண்களது கருத்துகளைக் கேட்பதில்லை. ஏற்கனவே அரசியலில் பங்கு கொள்கின்ற மற்றும் ஏற்கனவே பதவிகளில் இருந்த பெண்களும் மேற்கூறப்பட்ட விடயங்களிற்காக முன்னின்று செயற்படுதல் அவசியமாகும். இல்லாதுவிடின் பெண்களுக்கான அரசியல் உரிமையை வென்றெடுப்பது கடினமானதொன்றாகும்.●

# பெண்களுக்கெதிரான ஆணாதிக்கம் என்பது யாது?



ஆணாதிக்கம் எனும்போது பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற ஆண்கள் உருவாக்கியுள்ள அதிகார உறவுகளைக் குறிப்பிடலாம். இது தந்தைவழி சமூக அமைப்பிலிருந்து உருவாகியது. பெண்களை தமது ஆதிக்கத்திற்குள் உட்படுத்தி அவளது செயற்பாடுகள், சிந்தனை, சுதந்திரம், உழைப்பு, கல்வி, ஆற்றல் போன்றவற்றை மட்டுப்படுத்துகின்ற அல்லது தடைசெய்கின்ற ஒன்றாகவே ஆணாதிக்கம் காணப்படுகின்றது. இதனூடாகவே பெண்களுக்கெதிரான பாகுபாடுகள், ஏற்றத் தாழ்வுகள், பாரபட்சம் போன்றன முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இவற்றை பெண்களுக்கெதிராக செயற்படுத்தும் போது அங்கு முரண்பாடு தோன்றுகின்றது. இந்த முரண்பாடே பெண்களுக்கெதிரான வன்முறையாக மாற்றம் காண்கின்றது. மேற்கூறப்பட்ட பாகுபாடு, ஏற்றத்தாழ்வு போன்றவற்றை சமூகத்தில் உள்ள எல்லா நிலைகளிலும் உள்ள பெண்களும் எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது ஆணாதிக்கமானது பெண் என்ற பால்நிலை அடிப்படையில் ஆதிக்கம் செலுத்துகின்றமை கவனிக்கத்தக்கது.

ஆணாதிக்கம் தொடர்பாக ஏங்கல்ஸ் யாது கூறியுள்ளார் எனப் பார்த்தால், தனிச்சொத்து உருவான காலகட்டத்தில் பெண்களின் அடிமைத்தனமும் உருவாகி விட்டது என்பதே ஏங்கல்ஸ் அவர்களின் நம்பிக்கை. உலக வரலாற்றில் பெண்ணினத்தின் தோல்வி என்று தனிச் சொத்துடமை உருவான காலத்தை ஏங்கல்ஸ் குறிப்பிடுகிறார். அவரது “குடும்பம் தனிச் சொத்து இவைகளின் தோற்றம்” எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். “ஆண்-பெண் என்ற பாகுபாடின்றி, வேற்றுமைகள் இன்றி இருந்த காலம் உணவு சேகரித்து அலைந்து திரிந்த காலமாகும். இவ்வாறு உணவு சேகரித்து மற்றும் வேட்டையாடித் திரிந்த காலத்தில் திருமணம் முறையில்லாமலும் தனிச் சொத்து என்ற எண்ணமின்றியும் இருந்தது. குழந்தைக்குத் தாயை மட்டுமே தெரிந்திருந்தது.

> **“பெண்களின் மறு உற்பத்தித் திறனில், பெண்கள் எப்போது, எத்தனை பிள்ளைகளைப் பெறுவது என்பது தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்வது ஆண்களேயாகும். அதேபோலவே கருத்தடை முறைமைகள் பாவிப்பதிலும், குடும்பக்கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகளை பெண்களையே பெருமளவில் பின்பற்றச் செய்வதுமானது ஆணாதிக்கத்தின் கடுமையான போக்கைக் காட்டுகின்றது.”**

அதன் பிற்பாடு உணவு சேகரித்தல் மற்றும் வேட்டையாடுதலோடு விவசாயமும் இணைகின்றது. இதன்போது ஆண்கள் வேட்டையாடச் சென்ற போது, பெண்கள் வீடு என்ற ஓர் இடத்தை உருவாக்கி குழந்தைகளையும் சுற்றியுள்ள தேவைகளையும் நிறைவேற்ற முற்பட்டனர். இங்கு பெண்கள் சமூக அளவில் அதிகாரத்துடனேயே காணப்பட்டனர். ஆனால் காலப்போக்கில் சொத்து என்ற விடயம் தோற்றம் பெற்றபோது ஆண்கள் தாங்கள் தேடுகின்ற சொத்து தங்களது வாரிசிற்கே போய்ச் சேரல் வேண்டும் என்ற எண்ணக்கருவைத் தோற்றுவித்த போது, பெண்களைக் கட்டுப்படுத்தி

அடிமைகளாக்குவதற்கு முற்பட்டனர். அதற்காகப் பெண்களது பாலுணர்வைக் கட்டுப்படுத்தி ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறைமை உருவாக்கப்பட்டது".

மேற்கூறப்பட்டவாறு தனிச் சொத்துடமையின் தோற்றத்தின் பின்னணியில் பெண்கள் அடிமைப்படுத்தப்படத் தொடங்கியதன் பின்னர், பொருளாதாரத்தை அதாவது உணவு உற்பத்தியை ஆண்கள் தம் வசம் வைத்திருந்தனர். இதனால் பெண்கள் ஆண்களில் தங்கிவாழ வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது. ஆண்கள் தேடிய சொத்துகளுக்கு அவர்களது வாரிசுகளே உரிமை கொண்டாட வேண்டும் என ஆண்கள் விரும்பியதால் இவ்வேளையில் கற்புக் கோட்பாடு, குடும்பம் போன்ற விடயங்கள் பெண்கள் மீது திணிக்கப்பட்டன. காலப் போக்கில் பெண் பொருளாதார பலம் உள்ளவளாக இருந்த போதிலும் அதுவும் ஆணிண் சொத்தாகவே சமூகம் மாற்றிக் கொண்டது. இதன் வளர்ச்சியே பெண் ஆணின் பாலியல் தேவைக்காகவும் மற்றும் பிள்ளைகளைப் பெறும் கருவியாகவும் மட்டுமே பார்க்கின்ற ஆணாதிக்கப் பிடிக்குள் தள்ளப்பட்டாள். இவ்வாறு காலம் காலமாக பல்வேறு விடயங்கள் வாயிலாகவும் செல்வாக்குப் பெற்று வந்த ஆணாதிக்கமானது இன்றும் பலமாகவே பெண்ணைத் தன் பிடிக்குள் கட்டுப்படுத்திக் கொண்டு செயற்படுவதை பெண்களுக்கெதிராக இடம்பெறுகின்ற அனைத்துவித பாரபட்சங்கள் மற்றும் வன்முறைகளின் ஊடாகக் காணலாம். அந்தவகையில் பலதுறைகளில் ஆணாதிக்கம் பெண்களைக் கட்டுப்படுத்துகின்ற போதும் பெருமளவில் பொதுவாக பெண்களின் வாழ்க்கையில் ஐந்து துறைகளில் ஆணாதிக்கம் கட்டுப்பாடுகளை வெளிப்படுத்துவதாக பெண்ணிய சிந்தனையாளர் கம்லாபாசின் அவர்கள் ஆணாதிக்கம் ஒரு கண்ணோட்டம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அவையாவன

1. பெண்களின் உழைப்பு
2. பெண்களின் மறு உற்பத்தித் திறன்
3. பெண்களின் பாலியல் தன்மையின் மீதான கட்டுப்பாடு
4. பெண்களின் நடமாட்டம்
5. சொத்துரிமை மற்றும் பொருளாதாரம்

பெண்களின் உழைப்பு எனும்போது, பொருளாதாரத்தை ஈட்டும் வகையில் பெண்கள் தொழில் செய்து பெறுகின்ற வருமானமாக இருக்கலாம் அல்லது தமது வீடுகளிலே எவ்வித வருமானமுமின்றி உழைக்கின்ற உழைப்பாக இருப்பினும் எதுவாக இருப்பினும் அவை ஆண்களினாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றது. அத்தோடு உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படாமை, தொழில் பாகுபாடு காட்டல், பெண்கள் செய்யும் தொழிலுக்கு மதிப்பைக் கொடுக்காமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆகவே இவ்வாறான உழைக்கும் சக்தியைக் கட்டுப்படுத்தல் அல்லது உழைப்பின் வருவாயைச் சுரண்டல் என்பன ஆணாதிக்கத்திற்கு உட்பட்ட ஒன்றாகும்.

அடுத்து பெண்களின் மறு உற்பத்தித் திறனில், பெண்கள் எப்போது, எத்தனை பிள்ளைகளைப் பெறுவது என்பது தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்வது ஆண்களேயாகும். அதேபோலவே கருத்தடை முறைமைகள் பாவிப்பதிலும், குடும்பக்கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகளை பெண்களையே பெருமளவில் பின்பற்றச் செய்வதுமானது ஆணாதிக்கத்தின் கடுமையான போக்கைக் காட்டுகின்றது. பெண்களைப் பாலுறவில் வற்புறுத்தல், கருச்சிதைவைக் கட்டுப்படுத்தல், தாய்மையைப் பெண்களிடத்தில் திணித்தல் மற்றும் ஆண்மை-பெண்மை என்ற ஏற்றத்தாழ்வு நிலையை உருவாக்குதல் போன்றவற்றில் ஆணாதிக்கம் பாரியளவில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அத்தோடு பெண்களின் பாலியல்பு மீதான வரையறை பற்றிப் பார்த்தால், பெண்கள் எப்போதும் ஆண்களின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களாகவே கருதப்படுகின்றார்கள். அதேவேளை பெண்களது பாலியல்த் தேவைகளை வெளிப்படுத்த முடியாதவாறான கட்டுப்பாடுகளை சமூகம், மதம், கலாசாரம் என்பன பெண்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கின்றது.

தீவிரப் பெண்ணியப் பகுப்பாய்வானது பின்வருமாறு குறிப்பிடுகின்றது. அதாவது "ஆணாதிக்கம் பெண்களைத் தாய்க்குலமாக மட்டுமன்றி, பாலுறவு அடிமைகளாகவும் ஆக்குகின்றது. ஆணாதிக்கக் கொள்கையானது பெண்களின் தாய்மைக் குணத்தையும், பாலினக் குணத்தையும் இருமைப்படுத்திப் பிரித்துக் காட்டி முரண்படுத்துகின்றது. தாய்மைக் காலத்தைத் தவிர பெண்ணின் வாழ்வு முழுவதும் ஆண்களின் பாலின்பத்திற்காகவே என்கின்ற நிலைப்பாட்டை ஆணாதிக்கம் கொண்டுள்ளது. பழைய காலங்களில் பாலியல் பலாத்காரம் என்பது இருந்திருக்காது. ஆனால் ஆணாதிக்க விளக்க குணத்தில் பலாத்காரம் முன்னிலை கொண்டுள்ளது. பலாத்காரம் ஓர் கூர்மையான அரசியல் கருவியாகும். பலாத்காரம் என்பது அதிகார வர்க்கம், ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் மீது தொடுக்கும் ஓர் ஒடுக்குமுறைச் செயலாகும். விபச்சாரம், வலுக்கட்டாயமான ஈரினச் சேர்க்கை, அனைத்துமே பெண்களின் பாலியல்பு மீது ஆணாதிக்கம் கொண்டுள்ள இறுக்கமான

பிடியின் எடுத்துக்காட்டுகளாகும்". (ஆணாதிக்கம் ஒரு கண்ணோட்டம், பக்-16)

ஆணாதிக்கம் எவ்வாறு பெண்களது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துகிறது என்றால் இன, மத, கலாசாரத்தைக் கவசமாக வைத்துக் கொண்டு, அவற்றின் வாயிலாகப் பெண்களது நடமாட்டம், பேச்சுத் திறன், எழுத்துத் திறன், சிந்தனைத் திறன் போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றது. இவை பெண்களை ஓர் எல்லையை விட்டு மீளவிடாது வரையறை செய்கின்றன. இதில் மதம் மற்றும் கலாசாரம் பாரிய பங்கு வகிக்கின்றது.

அடுத்து சொத்துரிமை பற்றிப் பார்த்தால் சொத்துகள் பெண்ணிற்குரியதாக இருப்பினும் அதனை ஆள்பவராக ஆணே இருப்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் தமது சொத்துகளை விற்பது போன்ற நடவடிக்கைகளுக்கு கணவனது கையொப்பம் அவசியமாகின்ற நிலைமை சில இடங்களில் காணப்படுகின்றன. அதேவேளை பெண்ணுக்கு சட்டபூர்வமான சொத்துகள் இருக்கும் போது அவற்றை சமூக, கலாசார கட்டுப்பாடுகள் மற்றும் பெண்களுக்கெதிரான அடக்குமுறைகள், வன்முறைகள் வரையறை செய்கின்றன. ஆகவே சொத்துரிமை இருக்கும் பட்சத்தில் கூட அங்கு தீர்மானம் எடுக்கும் நிலையில் தந்தையோ அல்லது கணவனோ அல்லது சகோதரனோ முன்னிற்பது ஆணாதிக்கம் சொத்துரிமையில் செல்வாக்குச் செலுத்துவதை வெளிக்காட்டுகின்றது.

ஆகவே ஆணாதிக்கம் ஆண்-பெண் என்ற பால்நிலையை அடிப்படையாகக் கொண்டு உணவு, உடை, கல்வி, விளையாட்டு, பெண்களின் நடமாட்டம், பெண்களின் மீதான ஆண்களின் அதிகாரம், பாலியல் சுரண்டல், உழைப்புச் சுரண்டல், சொத்து போன்ற ஒவ்வொரு நிலையிலும் ஆதிக்கம் செலுத்துவதையும், அதேநேரம் சமூக, கலாசார, மத விழுமியங்கள் எப்போதுமே பெண் ஆணைவிட இரண்டாம் பட்சநிலை என்கின்ற மாயையை உருவாக்கி மேலும் மேலும் ஆதிக்க அதிகாரத்தினைப் பெண்கள் மீது பிரயோகித்துக் கொண்டிருக்கின்றது. ●



# மாந்தை மேற்கின் மனக்குமுறல்

மாந்தை மேற்கு வீதிகளிலே
மக்கள் சந்திக்கும் பேரவலம்
குண்டும் குழியுமான வீதியால்
குடல் கலங்கி கொந்தளிக்கிறது
குருதி கூட கொப்பளிக்கின்றது
கர்ப்பிணித் தாயும் கலங்குகின்றாள்

கண்டெக்டருடன் சண்டையும் நடக்கிறது
கன்னாபின்ன வாக்குவாதம் தொடர்கிறது
ஓட்டுனர் பேருந்தை வேகமாக ஓட்டுவதால்
ஓடிப்போய்த் தடுத்திடும் தாயுள்ளங்கள்
தாண்டவம் ஆடியே மனக் குமுறலாய்
தள்ளப்பட்டு தள்ளாடிடும் மாந்தை
மேற்குப்
பள்ளங்கள் .....
பாதாளம் போலவே
பள்ளங்களோ பக்கம் பக்கம் உள்ளதால்
அவசர பயணங்கள் கூட
ஆகின்றது பல மணித்தியாலங்களாக...
பயணம் என்றாலே
படபடத்திடும் உள்ளங்கள் - சிலர்
பாதியிலேயே நின்றும் விடுகின்றனர்

வீதிப் பிரச்சினையால்
காயமுற்றவர்களின்
உடல் பாகங்கள்
கழன்று விடும் நிலையிலே...
கூடவே வேதனையும்...

கண்டும் காணாமலும்
உலவியே திரிந்திடும்
மனிதர்கள் சிலருண்டு
அதை சாதகமாக்கி - பேரூந்தில்
முட்டி மோதும் ஆடவர்களும்
இடையிடையே...
மன்னார் மண்ணின்
மீள் குடியேற்ற இடமாம்
மாந்தை மேற்கில்
மக்கள்படும் திண்டாட்டத்தை
சொல்லால் சொல்லப் புரியாது
சொல்லிச் சொல்லி மாளாது

# யுத்தத்தில் பெண்

தட்டை ஒரு கையில் ஏந்தி
தனியாகக் குழந்தையுடன்
கணவனை இழந்து
விதவை என்னும் பெயருடன்....

வெடியோசை விண்ணைப் பிளந்து
செல்ல...
கணவனைத் தொலைத்து
கண்களில் கண்ணீரோடு...

விழுந்த உடல்களை
புதைக்க யாருமில்லை - இங்குள்ள
துன்பங்களை சொல்லியழ
எவருக்கும் உடலில் சக்தியில்லை
உடலும் உள்ளமும் தளர்கின்றது
எமது சோகம் நீளுகின்றது
என்று முடியுமோ எங்கள் வேதனை?
கேட்பதற்கோ ஆளில்லை
சொந்தங்களில் பலரில்லை
அகதி என்ற பெயருடனும்
அழைக்கப்படுகின்றோம்
விதவைகளென்று...

http://lankadesha.com





www.lankaindependent.com

# வடபகுதியில் அடிப்படைத் தேவைகள் இன்றி அல்லலுறும் முஸ்லிம் பெண்கள்

வடக்கு பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து 1990 காலப்பகுதிகளில் புலிகளால் கட்டாயமாக இடப்பெயர்விற்கு உட்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் சமாதான காலத்திலும் பின்னர் யுத்தம் முடிவடைந்த பின்னரும் சிறிது சிறிதாக மீளத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். சமாதன காலத்தில் வந்து குடியேறியோர்களில் 62 குடும்பங்கள் வன்னியில் யுத்தம் இடம்பெற்ற போதும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர். தற்போது 1941 குடும்பங்கள் மொத்தமாக மீளத்திரும்பியுள்ளார்கள். அதிலே 7798 தனிநபர் அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர். அவர்களில் பெண்கள் தொகை 4041 என அறிய முடிகின்றது. இவர்கள் தொடர்பான பதிவு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலகத்தில் குடும்பப் பங்கீட்டு அட்டைக்கான (அ - அட்டைக்கு) பதிவினைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனைப் பதிவதன் மூலமே இம்மக்கள் தமது மீள் குடியேற்றத்தை உறுதிப்படுத்த முடியும். யாழ்ப்பாணத்தில் ஒஸ்மானியாக் கல்லூரி மீள ஆரம்பமாகி விட்டது. அது ஒரு கலவன் பாடசாலை. 400 மாணவர்கள் வரையில் கல்வி கற்கின்றார்கள். மீளத் திரும்பியோரில் ஆண்கள் இரும்புத் தொழில் (பழைய இரும்புப் பொருட்களை சேகரித்து குறிப்பிட்ட நபரிடமோ அல்லது அதனைக் கொள்வனவு செய்வோரிடமோ கொடுத்தல்), இறைச்சிக்கு கிராமங்களுக்குள் சென்று ஆடு வாங்குதல், விற்றல் போன்றவற்றை செய்கிறார்கள். சில குடும்பங்களில் பெண்கள் உணவு சமைத்து விற்பதுண்டு. குறிப்பிடத்தக்க குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஆண்கள் வேறு திருமணம் செய்து சென்றமையால் தனித்த பெண்கள் பிள்ளைகளோடு இருக்கின்றார்கள். அத்தோடு யுத்த காலத்தில் காணாமல் போனோரின் மனைவிமார் இன்றுவரை தமது கணவன்மார்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் துர்ப்பாக்கியம் தமிழ்க் குடும்பங்களில் மாத்திரம் அல்ல முஸ்லிம் குடும்பங்களிலும் இருப்பதை அவர்களூடாக உரையாடும் போது விளங்கிக் கொள்ளலாம்.

வடபகுதிக்கு கிட்டத்தட்ட 20 வருடங்களுக்குப் பின்னர் தமது சொந்த ஊரை நோக்கித் மீளத்திரும்பிய முஸ்லிம்களின் தற்போதைய வாழ்க்கை நிலை மிகவும் வறுமைக்குட்பட்டதாகவே உள்ளது. வசதி உள்ள சிலர் (முஸ்லிம்கள்) வசதியற்ற சிலருக்கு தற்காலிக வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளார்கள். பெரும்பாலானோர் அடிப்படையான சுகாதார வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாத நிலையில் உள்ளார்கள். மலசலகூட வசதி, கிணறுகள் இல்லாத காரணத்தால் அயலில் உள்ளோரிடம் தேவை நாட வேண்டியுள்ளார்கள். இதனால் பிறரின் வெறுப்பிற்கும் இவர்கள் ஆளாக வேண்டியுள்ளது. திரும்பியவர்களில் பெரும்பாலானோர் தமது காணிகள், வீடுகளை ஏற்கனவே யுத்த சூழலில் விற்ற காரணத்தால் இன்று அவர்களுக்கான இருப்பிடம் இல்லாதுபோய் உள்ளது. இருப்பினும் தாம் பிறந்து வாழ்ந்த இடம் என்ற காரணத்தால் திரும்பவும் பெரும் எதிர்பார்ப்போடு வந்த பலருக்கு யாழ்ப்பாணத்து சூழல் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. இவ்வாறு மீளத் திரும்பியவர்களில் பெண்களே அதிகளவில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்களிலும் ஏற்கனவே குறிப்பிட்டது போல தனித்து விடப்பட்ட பெண்கள் நிலை கவலைக்கிடமானது. ஏனெனில் இப்பெண்கள் தொழில் வாய்ப்பைப் பெறுவதென்பது மிகவும் கடினமாகவே உள்ளது. புதிய சூழலில் தமது அடிப்படைத் தேவைகளைக் கூடப்

பூர்த்தி செய்ய முடியாத வருமானப் பற்றாக்குறை காரணமாக பல குடும்பத்துப் பெண்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஆரம்பத்தில் திரும்பியவுடன் அதாவது 1990 களில் சொத்துகள் அனைத்தையும் இழந்து சென்று 20 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் பிறந்த இடத்திற்குத் திரும்பிய போது அவர்களுக்காக UNHCR சில வீட்டுப் பொருட்களையும், அரசு ஒரு கிழமைக்கான முத்திரைப் பொருட்களையும், 5000 ரூபா பணத்தையும் மட்டுமே கணவன் காணாமல் போனதால் அவதியுறும் மற்றொரு பெண் குறிப்பிடுகையில் "எனக்கு வயது 33, புத்தளத்தில் 12 வருட இடப்பெயர்வு வாழ்வுக்குப் பிறகு 2010 பத்தாம் மாதம் யாழ்ப்பாணம் வந்தோம். எனது கணவர் வேறு மதத்தில் இருந்து இஸ்லாத்திற்கு வந்தவர். ஆனால் அவரது அப்பா முஸ்லிம். தில்லையடி புத்தளத்தில் இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடந்தது. நீர்கொழும்பு பெரிய முல்லையில் இருந்தோம். அவர் உடுப்பு வியாபாரத்தை



www.sailanmuslim.com




www.lankamuslim.com

**"வடக்கில் வாழ்கின்ற கணவனால் கைவிடப்பட்ட முஸ்லிம் பெண்கள் பலருக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதில் எவருமே அக்கறை காட்ட முன்வரவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் மௌனம் சாதிக்கின்றார்கள். பெண்கள் பிரச்சினைகள் பலருக்கும் பாரிய பிரச்சினைகளாகத் தோன்றவில்லை. இடப்பெயர்வு, வாழ்க்கையில் கணவனால் ஏமாற்றம், பிள்ளைகளது எதிர்காலம், வருமானம் இல்லாத வறுமைநிலை, அடிப்படை வசதிகள் இல்லாத வாழ்க்கை முறை இவ்வாறு சொல்ல முடியாத சிக்கல்களை பெண்கள் நாளாந்தம் அனுபவிப்பதை எம்மில் பலர் கண்டும் காணாமலும் செல்கின்றோம்."**

கொடுத்தது. உறவினர்கள் உதவியுடன் தற்காலிக வீட்டை அமைத்தும், பாடசாலையிலும், தெரிந்தோர் வீடுகளிலும் மீண்டும் இடம்பெயர்ந்த வாழ்க்கை முறையிலேயே இவர்கள் வாழ்கின்றார்கள். இது தொடர்பாக மீளத் திரும்பியோர்களில் ஒருவர் குறிப்பிடும் போது "கணவர் காணாமல் போய்விட்டார். அவர் இல்லாததால் அவருக்கு முத்திரை இல்லை. அவரை வெளியூரில் இருக்கிறார் எனப் பதிந்துள்ளார்கள். சொந்தக் காணி இல்லை. பிறந்த ஊர் என வந்துள்ளோம். தொழில் இல்லை. வடை வண்டில் போட விருப்பம். மாகாண சபையில் அனுமதி கேட்டம். அதற்கும் முதல் 5000 ரூபா தேவை. குடும்ப அட்டை எடுக்க 1400 ரூபா வேணும். குழந்தையுடன் கஷ்டப்படுகிறேன். எங்கட வீட்டில மலசல கூடம் இல்லை. அரசு இடம்பெயர்ந்தோர் என்ற வகையில் எமக்கு உதவுவது இல்லை. அதுவும் எம்மைப் போன்ற பாதிக்கப்பட்ட பெண்களை கவனிப்பதே இல்லை" எனக் குறிப்பிட்டார்.

வீட்டோடு வைத்து செய்து வந்தார். அந்த வேளையில் வேறு மதத்தில் இருந்து இஸ்லாத்துக்கு வந்தோரைக் கடத்தினார்கள். 2006.08.12 அன்று வெள்ளிக்கிழமை நீர்கொழும்புக்கு வேலைக்காகப் போனவரை காணவில்லை. பிற்பகல் விசாரித்தபோது புகையிரத நிலையத்துக்கு அருகில் வைத்து யாரோ வானில் பிடித்துப் போனதாக சொன்னார்கள். இது கூட இரண்டாம் நாள்தான் தெரிந்தது. இதுவரை தேடுகிறோம். ஆனால் இன்னும் அவர் வரவில்லை. 5 வயதுக் குழந்தையுடன் வாழுறேன். அவர் காணாமல் போனபோது பிள்ளைக்கு 9 மாதம். வருமானம் இல்லை. உணவு சமைத்து தெரிஞ்சவங்களுக்கு கொடுத்து வாறன். சொந்தக்காரருடன் இருக்கிறன்".

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை காதி நீதிமன்றம் இல்லாத காரணத்தால் மனைவியை விட்டு வேறு திருமணம் செய்த ஆண்களிடம் இருந்து தாபரிப்பு பெறும் பெண்களும், விவாகரத்து கோரும்

பெண்களும் அதிக சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். இவர்களுக்கான காதி நீதிமன்றம் இன்னும் யாழ்ப்பாணத்தில் இயங்கவில்லை. புத்தளத்தில் வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான காதி நீதிமன்றத்திற்கே செல்லல் வேண்டும். மேற்கூறப்பட்ட வறுமை நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து புத்தளத்திற்கான பிரயாணச் செலவைப் பொறுப்பெடுக்கும் நிலையில் பாதிக்கப்பட்ட பெண்கள் இல்லை. இதனால் காதி நீதிமன்றுக்கு முறைப்பாடு செய்ய முடியாது பலர் உள்ளார்கள். ஆண்கள் சிலரோ இதனை நன்கு உணர்ந்து கொண்டு வெளி மாவட்டங்களில் குடும்பமாக வாழ்கின்றார்கள். சிலர் புத்தளத்தில் காதி நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட தாபரிப்புப் பணத்தைக் கூட ஒழுங்காக செலுத்தாது ஏமாற்றி வருகின்றனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட ஓர் பெண் குறிப்பிடுகையில் "எனக்கு இருதய நோய். நோயைத் தெரிந்து விளங்கிக் கொண்டு திருமணம் செய்தார். ஒரு மகன் இருக்கிறார். 2008 ஆம் ஆண்டு வேறு திருமணம் செய்து போய்விட்டார். காதிக்கோட் இரண்டு நாட்களுக்கு 150 ரூபா தாபரிப்பு வழங்க வேண்டும் எனத் தீர்ப்புச் சொன்னது. சில நாள் தந்தார். திரும்ப எங்கோ போய்விட்டார். எங்கு எனத் தெரியாது. அம்மாவோடு இருக்கிறேன். அவர் மட்டி பிடிக்கப் போகிறவர். சகோதரங்கள் ஏதாவது தருவினம். எனக்கு மருந்து எடுக்க காசு தேவை. சின்ன முகைதீன் பாடசாலையில் இருக்கிறம். எம்மோடு 14 குடும்பம் வசிக்கின்றது. இது தவிர கதீஜா பாடசாலையிலும் 15 குடும்பம் வரையில் இருக்கிறார்கள். நிறுவனங்கள் கூட பெண்கள் அதுகும் தனித்த ஏழைப் பெண்கள் என எதுவும் செய்யவில்லை. அரசாங்கமும் அப்பிடித்தான். இருக்க இடம் இல்லை. யாழ்ப்பாணத்தில் காதி நீதிமன்றம் இல்லை. ஆண்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். தாபரிப்பை ஒழுங்காகக் கட்டுவதில்லை. முதலில் புத்தளக் காதிக் கோட் தான் விசாரித்து தீர்ப்பளித்தது. எனது கணவர் எங்கையெனத் தெரியாது. அவரைத் தேடிப்போக என்னால் முடியாது. பணம் இல்லை. யாரும் உதவுவதில்லை. என்னை மாதிரிப் பெண்களுக்குத் தாபரிப்பு என்பது முக்கியமானது. அதை ஒழுங்காகக் கிடைக்கச் செய்தால் எங்களுக்கு பிரச்சினை இல்லை".

காதிக்கோட் இல்லாத காரணத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாத சூழ்நிலையில் வாழும் மற்றொரு பெண் கருத்துக் கூறும் போது "சமையல் செய்து விற்று வாழ்ந்து வருகிறேன். எனது கணவர் என்னை விட்டுப் போய் வேறொரு பெண்ணோடு வாழ்கிறார். சந்தேகம் அவருக்கு. இதால தினம் சண்டை பிடிப்பார். அடித்து உதைப்பார். விவாகரத்து கேட்டு அடிப்பார். என்னோடு வாழப் பிடிக்கவில்லை என்று சண்டை பிடிப்பார். கொடுமை தாங்காது விட்டு விலகி விட்டேன். இன்னும் தாபரிப்பு எதுவும் தாறதில்லை. காதிக்கோட்டில் வழக்குப் போடணும். ஆனால் யாழ்ப்பாணத்தில் காதிக்கோட்டில்லை. அதனாலே புத்தளம் வரண்டாம். எனக்கு அங்கு போக வசதி இல்லை. தாபரிப்பு ஏதாவது கிடைத்தால் நல்லம். பிள்ளைகளோடு கஸ்டம். எனக்கு காணி எனது பெயரிலேயே இருக்கிறது. அதில் அவரது அம்மா இருக்கிறா. வீடு எனது மகளது பெயரில் இருக்கிறது. ஆனால் அவர் வாடகைக்கு விட்டு உழைக்கிறார். நான் வீடில்லாமல் இருக்கிறேன். சிலர் என்னை சமாளித்துப் போக சொல்கிறார்கள். புத்தளத்தில் காதிக்கோட்டுக்கு அறிவித்தேன். அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. திரும்ப போய் முறையிட பண வசதி இல்லை. காதிக்கோட் பெண்களுக்காக எதுவும் செய்வதில்லை. எங்களது கருத்தை கேட்பதில்லை. எங்களுடைய இடத்தில் காதி கோட் இருக்க வேணும். பிள்ளைகளோடு இருக்கிற எங்களால் ஒவ்வொரு தவணைக்கும் எப்பிடிப் புத்தளம் போக முடியும்? அத்தோடு காதிக்கோட்டில் ஆண்களே இருக்கினம். இயல்பாகவே தனிப்பட்ட பிரச்சினையை பிறரோடு பகிர்ந்து பேசிப்பழகவில்லை. அதனால எங்கடை குடும்பப் பிரச்சினைகளை விளக்கிச் சொல்ல கூச்சமாகவும் இருக்கும். சொல்லா விட்டால் எங்களிலை பிழை போலவும் இருக்கும். யாழ்ப்பாணத்தில் உள்ள பள்ளிக்கும் எனது பிரச்சினையை அறிவித்துள்ளேன். இன்னும் முடிவு கிடைக்கவில்லை" எனக் குறிப்பிட்டார்.

வடக்கில் வாழ்கின்ற கணவனால் கைவிடப்பட்ட முஸ்லிம் பெண்கள் பலருக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதில் எவருமே அக்கறை காட்ட முன்வரவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் மௌனம் சாதிக்கின்றார்கள். பெண்கள் பிரச்சினைகள் பலருக்கும் பாரிய பிரச்சினைகளாகத் தோன்றவில்லை. இடப்பெயர்வு, வாழ்க்கையில் கணவனால் ஏமாற்றம், பிள்ளைகளது எதிர்காலம், வருமானம் இல்லாத வறுமைநிலை, அடிப்படை வசதிகள் இல்லாத வாழ்க்கை முறை இவ்வாறு சொல்ல முடியாத சிக்கல்களை பெண்கள் நாளாந்தம் அனுபவிப்பதை எம்மில் பலர் கண்டும் காணாமலும் செல்கின்றோம். பெண்கள் அமைப்புகளால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கூட பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இவற்றை வெளிக் கொண்டு வருவதில் பல தரப்பினரும் தயக்கம் காட்டுகின்றனர். இவ்வாறான சில பிற்போக்குத்தனமான காரணங்களால் வடபகுதியில் மீளத்திரும்பிய தனித்துவிடப்பட்ட முஸ்லிம் பெண்கள் சமூகமானது கவனிப்பாரன்றி தனித்துவிடப்பட்டதாக உள்ளமை வேதனைக்குரியது. இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு குறிப்பிட்ட பெண்கள் பிரச்சினைகள் தீர வழிசமைப்பது அவசியமானதாகும். ●



# குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம்

முன்னேற்றப் பாதைகள் பலவற்றில் பெண்கள் தடம் பதித்துள்ள போதும் அவர்களிற்கெதிரான வன்முறைகள் பல புதிய வடிவங்களில் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. பெண்கள் எதிர்நோக்குகின்ற உடல் உள பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள், வார்த்தைத் துஷ்பிரயோகம், பொருளாதார துஷ்பிரயோகம், வாழ்க்கைக்கு தேவையான வழங்களை மறுத்தல், சுதந்திரத்திற்கும் நடமாட்டத்திற்குமான தடை, வர்த்தக ரீதியான சுரண்டல் போன்ற மனித உரிமை மீறல்களிற்கு எதிராக பெண்கள் போராடினாலும் பல சந்தர்ப்பங்களில் பெண்கள் “சார்ந்திருப்போராக” அல்லது “தங்கிவாழ்வோராக” வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவும் இருப்பதால் அவர்களால் சுய முடிவு எடுக்கவோ தனித்துப் போராடவோ முடியாத நிலை காணப்படுகின்றது.

ஆணுக்கும் பெண்ணிற்கும் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வான அதிகார உறவு முறை காலம் காலமாக சமூகத்தால் கட்டமைக்கப்பட்டு வந்துள்ளதை சமூக சமுதாய கட்டமைப்புகளினூடாக விளங்கிக்கொள்ள முடிகின்றது. இவைகள் எழுத்தில் எழுதப்படாத சட்டங்களாகவும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியதாகவும் உள்ளது. இணங்கியொழுகத்தவறின் சமூகத்திலிருந்து அவர்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர் அல்லது தனிமைப்படுத்தப்படுகின்றனர். சமூக கலாசார அரசியல் மற்றும் மதக்கட்டமைப்புகளுக்கு மேலதிகமாக வேறு சில விடயங்களும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிகழக்கூடிய நிலைமைகளை அதிகரிப்பதிலும் தோற்றுவிப்பதிலும் பங்களிக்கின்றன.

இலங்கையில் குடும்ப வன்முறையானது அதிகளவில் இடம்பெறுவதுடன் பெரும்பாலும் அது வெளிக்கொணரப்படுவதில்லை. இதற்கு ஏழ்மை மற்றும் கல்வியறிவின்மை போன்ற காரணங்களையும் குறிப்பிடலாம் குடும்ப வன்முறையானது பல சமூக சீர்குலைவுகளுக்கு காரணமாக அமைவதுடன் அதிகமாக பெண்களும் சிறுவர்களுமே பாதிக்கப்படுகின்றனர். 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளை தடுப்பதற்கான சட்டத்தின் மூலம் குடும்பத்தில் வாழும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் பாதுகாப்புக் கிடைக்கின்றது. இச்சட்டத்தின் சில ஏற்பாடுகளை நோக்குவோமாயின்...

கீழ் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட நபரொருவர் அல்லது பாதிப்பு ஏற்படக்கூடிய சாத்தியமுள்ள நபர் இச்சட்டத்தின் கீழ் உரிய அல்லது இயைபுடைய நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து குடும்ப வன்முறையை தடுப்பதற்கான பாதுகாப்பு கட்டளையொன்றை பெற்றுக் கொள்ள முடியும். பாதுகாப்பு கட்டளை 12 மாதங்களுக்கு கூடாதிருக்க வேண்டும் அந்த 12 மாதங்களுக்குப் பிறகு மீண்டுமொரு கட்டளை அவசியமெனின் நீதிமன்றத்திடம் மீண்டும் கோரிக்கை விடுக்க வேண்டும். அவ்வாறு கோரிக்கை விடாதிருப்பின் கட்டளை தானாகவே செயலிழக்கும்.

இப்பாதுகாப்புக் கட்டளையானது,

- பாதிக்கப்பட்ட நபரினால் அல்லது பாதிப்பு ஏற்படவுள்ளதாக நியாயமான சந்தேகத்தைக் கொண்டிருக்கும் நபரினால்
- பாதிக்கப்பட்ட நபரின் சார்பாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால்
- பாதிக்கப்பட்டவர் சிறுவராக இருக்கும் சந்தர்ப்பத்தில் சிறுவரின் பெற்றோரில்

ஒருவரினால் அல்லது சிறுவரின் பாதுகாவலரினால்

- சிறுவர் வசிக்கும் இடத்தில் வசிக்கும் ஒருவரால்
- 1998 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை சேர்ந்த எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒருவரினால் பாதுகாப்புக் கட்டளையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முறைப்பாடு செய்வதற்கு விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப முறைப்பாடு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவரினதும் குற்றம் புரிந்தவரினதும் பெயரும் விலாசமும் உரிய குடும்ப வன்முறையுடன் சம்பந்தப்பட்டுள்ள சகல விதமான விபரங்கள் விண்ணப்பப் படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் சம்பவம் தொடர்பாக தெரிந்தவர்களின் சத்தியக்கூற்றை விண்ணப்பத்துடன் இணைப்பது சிறப்பானதாக இருக்கும். ஆனால் இது கட்டாயமானதல்ல

நீதிமன்றமானது ஒரு இடைக்கால கட்டளை அல்லது பாதுகாப்புக் கட்டளை மூலமாக

- பாதிக்கப்பட்டநபரும் பிரதிவாதியும் சேர்ந்து வாழும் வதிவிடத்திற்குள் அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதிக்குள் நுழைவதிலிருந்து,
- பாதிக்கப்பட்டநபரின் வதிவிடம், தொழில் இடம், பிள்ளைகளின் பாடசாலை என்பவற்றுக்குள் நுழைவதிலிருந்து,
- பாதிக்கப்பட்டநபர் தற்காலிகமாக தங்கியிருக்கும் ஏதேனும் தங்குமனைக்குள் நுழைவதிலிருந்து,
- பாதிக்கப்பட்டநபருடன் தொடர்பை ஏற்படுத்துவதிலிருந்து அல்லது தொடர்பை ஏற்படுத்த முனைவதிலிருந்து
- பாதிக்கப்பட்டவர்க்கு உதவி செய்கின்ற உறவினர், நண்பர், சமூகசேவகர் அல்லது மருத்துவ அலுவலர் அல்லது வேறு எவரேனும் ஆளுக்கெதிராக வன்முறைச் செயல்களைப் புரிவதிலிருந்து,
- தொல்லை புரியும் நோக்கில் பாதிக்கப்பட்டநபரை பின்தொடர்வதிலிருந்து
- பாதிக்கப்பட்டநபருக்கு அல்லது பாதுகாப்பு வழங்க வேண்டும் என நீதிமன்றம் கருதும் நபரின் பாதுகாப்பு, உடல் நலத்திற்கு அல்லது நல்வாழ்விற்கு பாதிப்பு ஏற்படும் என நீதிமன்றம் அபிப்பிராயப்படும் ஏதேனும் நடத்தையில் ஈடுபடுவதிலிருந்து பிரதிவாதியைத் தடுப்பதுடன்
- பாதிக்கப்பட்டநபரை அனாதரவான நிலைக்குத் தள்ளும் நோக்கில் விவாக வீட்டை விற்பதை, வேறொருவருக்குச்சாட்டுதல், உரிமையை மாற்றுதல் போன்றவற்றை தடை செய்யும் படி கேட்கலாம்.

ஆயினும் விண்ணப்பம் செய்யும் போது பிரதிவாதியை வீட்டிலிருந்து வெளியேற்றக்கோருவதும் அதற்கான தீர்ப்பை நீதிமன்றம் வழங்குவதும் கட்டாயமானதல்ல. அவ்வாறான தீர்மானத்தை எடுப்பது குறிப்பிட்ட குடும்ப வன்முறையின் பாரதூரமான தன்மையைப் பொறுத்ததாகும். குடும்ப வன்முறையை மட்டும் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் அதற்கான கட்டளையை மட்டும் பிறப்பிக்கும் படி நீதிமன்றத்தைக் கேட்க முடியும். பிரதிவாதியை வீட்டிலிருந்த வெளியேற்றுவதாயின் மாற்று இடமொன்று அவருக்கு இருக்கின்றதா என்பதை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும்.

பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்கியதன் மேல் நீதிமன்றம் உடனடியாக அத்தகைய கட்டளையை பிரதிவாதியிடம் சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் பாதுகாப்புக் கட்டளையை பிரதிவாதி மீறினால் அது சம்பந்தமாக நீதவான் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டு பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கப்படும். அல்லது இவ்விரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

இக்குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டம் தொடர்பாக சமுதாயத்தினரிடையே போதிய விளக்கமின்மையும் இச்சட்டத்தினூடாக யார் நிவாரணம் பெறமுடியும் என்கின்ற குழப்ப நிலைமையும் காணப்படுகின்றது. இச்சட்டம் தொடர்பான விழிப்பு மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட வேண்டியதாகவுள்ளது.

இலங்கையில் எதிர்கொள்ளப்படும் பிணக்குகளில் பெண்களிற்கு சமமான உரிமைகள் மற்றும் அந்தஸ்து வழங்கப்படவில்லை என்பது முக்கியமானதாகும். சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பதற்கிணங்க பெண்களிற்கும் சமமான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்

எனவே அதிகார கட்டமைப்புகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், சட்டங்கள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளில் மாற்றங்கள் அவசியம் என்பதுடன் அரசின் சட்டங்கள், திட்டங்கள், கொள்கைகளில் பாலியல் கூருணர்வு இருக்க வேண்டும் என்பதுடன் பெண்கள் வலுவடைந்தவர்களாக (empowered) மாறுகின்றபோதுதான் பெண்களிற்கெதிரான வன்முறைகளை குறைக்கக் கூடியதாக இருக்கும். ●

இலங்கையில் நிறைவடைந்துள்ள உள்நாட்டு யுத்தமானது ஆண்கள் மீது செலுத்திய பாதிப்பை விட பெண்கள் மீதே அதிகளவான தாக்கத்தை செலுத்தியுள்ளது. பெண்களது நிலைத்து நிற்கக் கூடியவாறான சமாதானம் மற்றும் அரசியல் உரிமை போன்றன கட்டியெழுப்பப்படாத மந்தமான சூழலிலேயே இன்னமும் நகர்ந்து செல்கின்றது. 2000 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பெண்கள் சமாதானம், பாதுகாப்பு பற்றிய 1325 ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலம் பெண்கள் சமாதானம், பாதுகாப்பு என்பன கட்டியெழுப்பப்படல் வேண்டும் என்ற சர்வதேச அங்கீகாரம் வலுப்படுத்தப்பட்டது.

பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான (CEDAW) சர்வதேச உடன்படிக்கையானது 1981 ஆம் ஆண்டு 3 ஆம் திகதி அமுலுக்கு வந்தது. இவ்வுடன்படிக்கையில் இலங்கையும் கைச்சாத்திட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பெண்களது அரசியற் பங்களிப்பைக் கட்டியெழுப்புதல் மற்றும் பலப்படுத்தல் தொடர்பாக UNSCR 1325, வாசகம் 1 மற்றும் 8(இ) CEDAW 7 ஆவது உறுப்புரையின் அ,ஆ,இ என்பன அரசியல் மற்றும்




# பெண்களும் அரசியலும்

பொது வாழ்க்கையில் பெண்கள் பங்களிப்புத் தொடர்பாகவும், CEDAW GR (1997) அரசியல் மற்றும் பொது வாழ்க்கை தொடர்பாகவும் CEDAW GR 6 பயனுறுதியான தேசியப் பொறிமுறை தொடர்பாகவும் குறிப்பிடுகின்றன. இருப்பினும் இலங்கையை எடுத்துக் கொண்டால் பெண்களது அரசியல் பங்களிப்பு மற்றும் பிரதிநிதித்துவம் தொடர்பில் சமுதாயத்துடன் எந்தவொரு விதமான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களையோ அல்லது அரசியலில் ஈடுபடும் பெண்கள் பொருட்டு உதவியளித்தல், விழிப்புணர்வு கொடுத்து வலுப்படுத்துவதையோ செய்யவில்லை என்றே கூறலாம்.

அரசானது பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை ஒழித்தல், பெண்களுக்கு அரசியலில் சம சந்தர்ப்பத்தை வழங்கல், பெண்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தல், யுத்தத்தால் அங்கவீனமான பெண்களது வாழ்வாதாரம், கணவனை இழந்த பெண்களுக்கான தொழில் வாய்ப்புப் போன்ற பல செயற்பாடுகளை நிறைவேற்றாது புறக்கணித்தே வருகின்றது. இதிலே குறிப்பாக யுத்தம் நிறைவடைந்து மீள் அபிவிருத்தியை

**“யுத்தம் நிறைவடைந்து மீள் அபிவிருத்தியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெண்களது அரசியல் பங்குபற்றுகை என்பது இன்னமும் மிக மிகக் குறைவாகவும் ஊக்குவிக்கப்படாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. அரசியலில் ஆண்களை ஈடுபடச் செய்வதற்காக முன்னெடுக்கப்படும் முனைப்பு மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பெண்களை அரசியலில் ஈடுபடுத்துவது தொடர்பாக அரசோ அல்லது அரசியற் கட்சிகளோ ஆர்வம் காட்டுவதில்லை.”**

எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெண்களது அரசியல் பங்குபற்றுகை என்பது இன்னமும் மிக மிகக் குறைவாகவும் ஊக்குவிக்கப்படாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. அரசியலில் ஆண்களை ஈடுபடச் செய்வதற்காக முன்னெடுக்கப்படும் முனைப்பு மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பெண்களை அரசியலில் ஈடுபடுத்துவது தொடர்பாக அரசோ அல்லது அரசியற் கட்சிகளோ ஆர்வம் காட்டுவதில்லை. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் பெண்கள் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்கதாக இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓரிருவரின் பங்குபற்றுகையையே காண முடிகின்றது.

அந்தவகையில், போரின் வடுக்களையும் இழப்புகளின் வலியையும் தாங்கிய பிரதேசங்களுள் ஒன்றாகிய வன்னிப் பகுதியில் அதிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து, பெண்கள் அரசியலில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் காலடி எடுத்து வைத்துள்ளனர். நடந்து முடிந்த முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் உள்ளூராட்சித் தேர்தலில் தெய்வேந்திரம் சரஸ்வதி அவர்கள் வெற்றி பெற்றுள்ளார். இவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாண்டியன் குளம் பிரதேசத்தை சேர்ந்தவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக போட்டியிட்டு தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து 12 பேர் போட்டியிட்டனர். 9 ஆண்களும் 3 பெண்களும் பங்கு கொண்டனர். இதிலே தெய்வேந்திரம் சரஸ்வதி உட்பட 6 பேர் வெற்றி பெற்றனர். ஏனைய 5 பேரும் ஆண்களாவர். அரசாங்கத்தரப்பில் இருந்து 3 பேர் தெரிவானார்கள்.

தெய்வேந்திரம் சரஸ்வதி அவர்களது வெற்றியானது சாதாரணமான ஓர் வெற்றியல்ல. ஏனெனில் பல ஆண்டுகளாக யுத்தத்தின் பிடியில் சிக்குண்ட சமூகத்திலிருந்து விடுபட்டு வலிகளைக் கடந்த சூழலில் இருந்து, தற்போதும் பலவாறான அரசியல் மற்றும் மறைமுக ஆயுத வன்முறைக் கலாசாரத்தின் மத்தியிலும் முற்று முழுதான இராணுவமயமான சூழலில் இருந்தும் அரசதரப்பிற்கு எதிரான ஓர் கட்சியூடாக போட்டியிட்டு வெற்றி பெற்றமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். பெண்கள் குடும்பத்தோடு பிணைக்கப்பட்டவர்கள், உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள், தலைமைத்துவப் பக்குவமற்றவர்கள் என மரபு ரீதியாக சுமத்தப்பட்டு வருகின்ற குற்றச்சாட்டுக்களை தெய்வேந்திரம் சரஸ்வதி அவர்களது அரசியல் வெற்றியானது பொய்ப்பித்து விட்டது எனலாம்.

திருமதி தெய்வேந்திரம் சரஸ்வதி அவர்களது வெற்றிக்கு பாண்டியன்குளம் கிராம மக்கள், உள்ளூர் மாதர் சங்கங்கள், கிராமக் குழுக்கள் என்பன ஆதரவு வழங்கின. குடும்ப ரீதியில் பார்க்கும் போது திரு. தெய்வேந்திரம் அவர்கள் மனைவியின் வெற்றிக்காகத் தானும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். விவசாயத் தொழில் செய்து வரும் இவர், தனது மனைவி அரசியலில் ஈடுபட வேண்டும் என விரும்பி ஊக்குவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இராணுவ அழுத்தம் அதிகம் காணப்படும் பிரதேசமாகையால் தேர்தல் காலத்தில் அதனைப் பயன்படுத்தி இனம்தெரியாதோரும் மிரட்டிப் பின்வாங்கச் செய்வதற்கு முனைந்தனர். இருப்பினும் இவர் ஏற்கனவே கிராம மக்களுக்கு செய்து வந்த சமூக சேவைகள் காரணமாகவும், தற்துணிவு காரணமாகவும் வெற்றி பெற்றுள்ளார்.

பாண்டின்குளம் பிரதேசம் தொடர்பாக சரஸ்வதி அவர்கள் குறிப்பிடுகையில் "பாண்டியன்குளத்தில் 246 குடும்பங்கள் உள்ளன. கணவனை இழந்த பெண்கள் 46 பேர் இருக்கிறார்கள். இன்னமும் இந்தப் பிரதேசத்து ஆண்கள், பெண்கள் தடுப்பில் இருக்கிறார்கள். விடுதலையான முன்னாள் போராளிகள் குடும்பத்தோடு இருக்கிறார்கள். யுத்தத்தால் ஊனமுற்றோர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு வருமானம் இல்லை. வாழ்வாதாரப் பிரச்சினை இருக்கிறது. தொழில் வாய்ப்புக் குறைவு. இன்னமும் யுத்தத்தால் உடைந்த வீடுகளைத் திருத்தாத சனம் நிறையப் பேர் இருக்கிறார்கள். எல்லாரும் தற்காலிகமாக திருத்திய கொட்டில்களிலேயே இருக்கிறோம். மலசலகூட வசதி இல்லை. சுகாதாரம் பாதிக்கிறது. வீதி அபிவிருத்தி பற்றிக் கேட்கிறோம். செய்து தருவதாக சொல்கிறார்கள். இடையிடையே அபிவிருத்தி நடக்கிறது. வீட்டுத் திட்டம் இன்னும் ஒழுங்காக வரவில்லை. போக்குவரத்துக் கஷ்டமாக இருக்கிறது. வீதியெல்லாம் தற்காலிகமாக கிறவலால் போட்டிருக்கிறார்கள். இதனால் தூசி அதிகம் கிளம்பி விடுகிறது. தூசி காரணமாக வருத்தம் வருகிறது. தற்போதுதான் ஊரில் விவசாயம் செய்யத் தொடங்கியுள்ளார்கள். பெரும்பாலும் சுயமுயற்சிதான். இந்தப் பிரதேசத்தில குறிப்பாகப் பெண்களது வாழ்வுத்தரத்தை உயர்த்துவது அவசியம். அத்தோடு தடுப்பில் இருக்கும் பெண்களது சொத்துரிமை மற்றும் வீட்டுத் திட்டம் என்பன பற்றி கவனத்தில் எடுக்க வேண்டும். அவர்கள் கவனிப்பாரன்றி போகும் அபாயம் இருக்கிறது.

வன்னியைப் பொறுத்தவரை காணிப்பிரச்சினை பெரிதாக இருக்கிறது. பெண்கள் பலர் காணிப் பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள். ஆதாரங்கள் அழிவும் இதற்கு ஒரு காரணம். கணவனை இழந்தவர்களுக்கு தனித்து நிற்கக் கூடிய பலத்தைக் கொடுக்க வேணும். அவர்கள் உதவி தேடிப்

பிறரிடம் போவதாலும் பிரச்சினைகள் வருகிறது. எங்கள் பிரதேசத்தில் இருந்து யுத்த காலத்தில் காணாமல் போனோர் காணாமல் போனோராகவே இருக்கிறார்கள். எந்தத் தகவலும் இல்லை.

கல்வி நிலை பற்றிப் பார்க்கும் போது இந்தக் கிராமத்தில் மட்டுமன்றி பொதுவாகவே வன்னியைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் போன்ற பிற மாவட்டத்தில் இருந்தே ஆசிரியர்கள் கற்பிக்க வருகிறார்கள். காலையில் புறப்பட்டு வரும் அவர்கள் பாடசாலை முடிவடையத் திரும்புகிறார்கள். இதனால் அவர்களது எண்ணமும் சிந்தனையும் போக்குவரத்திலும், பயணத்திலும், வீட்டில் இருக்கும் அவர்களது பிள்ளைகள் மீதுமே இருக்கின்றது.

தற்போது நிலவுகின்றன. குடும்பங்களில் உள்ளவர்களுக்கும் மாணவர்களுக்கும் சில விழிப்புணர்வுத் திட்டங்கள் செய்தல் வேண்டும். குறிப்பாக பாலியல்பு சம்பந்தமாக மற்றும் இனப்பெருக்கம் தொடர்பாக விழிப்புணர்வு தேவை. குடும்பக் கட்டுப்பாடு பற்றி பெரிதும் தெரியாதுள்ளார்கள். பெண்களுக்கு குடும்ப அமைப்பில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமானது.”

ஆகவே, இதுவரை காலமும் இருந்த யுத்த சூழலில் இருந்தும் அவை தந்த காயங்களில் இருந்தும் பெண்கள் விடுபட்டு அரசியல் பாதை நோக்கி செல்லத் தொடங்கியுள்ளமைக்கு திருமதி சரஸ்வதி





**“ வன்னியைப் பொறுத்தவரை காணிப்பிரச்சினை பெரிதாக இருக்கிறது. பெண்கள் பலர் காணிப் பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள். ஆதாரங்கள் அழிவும் இதற்கு ஒரு காரணம். கணவனை இழந்தவர்களுக்கு தனித்து நிற்கக் கூடிய பலத்தைக் கொடுக்க வேண்டும். அவர்கள் உதவி தேடிப் பிறரிடம் போவதாலும் பிரச்சினைகள் வருகிறது. ”**

ஏனெனில் வன்னிப் பகுதியில் ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகள் இல்லை. அவர்கள் தமது குடும்பத்தோடு இங்கு வந்திருக்கக் கூடிய பாதுகாப்பான மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் தமது சொந்த இடங்களில் இருந்தே வந்து போகின்றனர். இதனால் ஆசிரியர்கள் வரவு குறைவாகவே இருக்கிறது. பெரும்பாலும் வெள்ளிக் கிழமைகளில் லீவு எடுத்து விடுகின்றனர். ஆகவே மாணவர்களது கல்வி என்பது எமது பிரதேசத்தில் பின்தங்கிப் போவதற்கு இதுவும் ஒரு காரணமாகின்றது. அத்தோடு பாடசாலைகள் இன்னமும் அபிவிருத்தி செய்யப்படாமலும் இருக்கின்றன. மாணவர்கள் அடிப்படை வசதிகள் இல்லாது பல இடங்களில் கல்வி கற்கிறார்கள். உள்ளூர் பாடசாலைகள் பெருமளவில் இன்னமும் மீளப் புதுப்பிக்கப்படவில்லை. ஆகவே மாணவர்கள் தூரப் பாடசாலைகளுக்கு போய் வருகிறார்கள். இதனால் உள்ளூர் பாடசாலைகளில் மாணவர்களது வரவு வீழ்ச்சி காண்கிறது. எமது பகுதிகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் குறைவு. அதேபோலவே நிகழ்ச்சித் திட்டங்களும் குறைவாகவே உள்ளன. சமூகத்தில் உணர்வு ரீதியான பிரச்சினைகள்

அவர்களது அரசியல் பிரவேசம் சிறந்த எடுத்துக் காட்டாகும். இருப்பினும் தற்காலத்தில் அரசியலானது ஆண்மை மயமாக்கப்பட்டுள்ளது. ஆயுதங்களின் ஆதிக்கமும், வன்முறையின் கட்டுக்குள்ளும் சிக்கியதான அரசியல் கலாசாரத்துள் பணத்தின் செல்வாக்கு போன்றன பெண்கள் தமது அரசியல் உரிமையைப் பெற்றுக் கொள்ளத் தடைகளாக இருக்கின்றன. இருப்பினும் பெண்கள் விரும்பி அரசியலுக்குள் நுழைய முற்படுகையில் ஆண்மைத் தன்மை, வன்முறை, பணம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. பெண்கள் பொதுவாகவே சமாதானத்தை விரும்புபவர்கள். ஆகவே இவற்றின் ஆதிக்கம் காரணமாகப் பலர் பின்வாங்க வேண்டிய சூழலில் உள்ளார்கள். இருப்பினும் தற்காலத்தில் பெண்களுக்கான தேவைப்பாட்டை, அபிவிருத்தியை பெண்களே நிறைவேற்ற வேண்டிய நிலையே உள்ளது. அதற்கு பெரும்பான்மையான அரசியல் அதிகாரமானது பெண்களுக்கு இன்றியமையாதது. அதை வென்றெடுப்பதே இன்று பெண்களாகிய எம்முன்னால் உள்ள பாரிய சவாலாகும். ●

**இயற்கையை அழிப்பதனால் பெண்களது வாழ்வாதாரம் அழிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டும் கேலிச்சித்திரங்கள்**



# கலாசாரம் என்ற போர்வையில் மூடி மறைக்கப்படும் பெண்கள் தற்கொலைகளும் கொலைகளும்



யுத்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான பின்னரும், பெண்கள் விவகாரங்களுக்கென தனியான அமைச்சு ஒன்று இருக்கின்ற சூழலிலும் கூட பெண்களுக்கெதிரான வன்முறை கட்டுப்படுத்தலின்றி நாளாந்தம் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. குறிப்பாக அண்மைக் காலமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் அதிகளவில் பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்படுவதாகவே மருத்துவ அறிக்கைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. தொடர்ச்சியாக இவ்வாறு குறிப்பிட்ட சில பிரதேசங்களில் நிகழ்கின்ற பெண்களுக்கெதிரான கொலைகள் மற்றும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைத் தடுப்பதற்கோ அல்லது அவற்றிற்கெதிரான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையானது கவனத்திற்குரியது. இன்றெல்லாம் பெண்கள் கொலைகள், தற்கொலைகள் மற்றும் பாலியல் வல்லுறவுச் செய்திகள் சாதாரணமாக நிகழும் நிகழ்வாகவும் அவற்றிற்கு உரிய சட்ட நடவடிக்கை எடுப்பது மிகவும் குறைவாகவுமே இருப்பது வெளிப்படை. இல்லையேல் கடந்த ஆறுமாதங்களில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 28 கொலைகள் மற்றும் தற்கொலைகள் இடம்பெற்றதாக உத்தியோக பூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றிற்கான காரணங்கள் யாவை? இவற்றைத் தடுப்பதற்காக உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் யாவை? என ஆராயும் போது எமக்குக் கிடைப்பது ஏமாற்றம் மட்டுமே. அரச தரப்பானது யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு முறைமையான திட்டத்தைக் கொண்டு வருவதற்குப் பதிலாக தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகும் பெண்களையே குற்றம் சுமத்துகிறது. அண்மையில் யாழ் அரச அதிபர் இமெல்டா சுகுமார் அவர்கள் குறிப்பிட்டதாக தமிழ் இணையமொன்றில் இடம்பெற்ற செய்தியின்படி பார்க்கும் போது அவர் தானும் ஓர் பெண்ணாக இருந்தும் கூட பெண்களது பிரச்சினைகள் மற்றும் நியாயங்களை உணராது கருத்துக் கூறியுள்ளமையைக் காண முடிகின்றது. பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் பற்றிக் கருத்துக் கூறும் போது அவர் "யாழ்ப்பாணப் பெண்களுக்கு ஒழுக்கம் கிடையாது" எனக் குறிப்பிட்டதாக 19.06.11 அன்று குறிப்பிட்ட தமிழ் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

> **“யாழ்ப்பாணத்தில் குழுக்களுக்கிடையே பிரிவினையை வலுப்படுத்துவதன் காரணமாகப் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரிக்கின்றன. காதல், திருமணம் என்ற பெயரில் பெண்கள் சிலர் ஏமாற்றப்படுதல், கொலை செய்யப்படுதல், கர்ப்பமாதல் எனக் கைக் குழந்தையோடு காவல்நிலையத்திற்கு அலைந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் பாதிப்பை உண்டாக்கியவர்கள் பாதுகாப்பாக நடமாடித் திரிந்து கொண்டிருக்கிறார்கள்.”**


பொறுப்பான பதவிகளில் இருப்போர்கள் கூட பெண்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து கலாசாரத்துடன் அவர்களை இணைத்து விமர்சிப்பதையும், அவர்களை ஒழுக்கம் என்ற விடயத்துடன் கட்டிப்போடுவதோடு அதனூடாக வன்முறையாளார்களைத் தப்பிக்க வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கலாசாரத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பினை சமூகம் பெண்ணிடமே திணிக்கின்றது. பாரம்பரியம், மரபு என்ற விடயங்களுக்கு பெண்கள் மாத்திரமே முக்கியத்துவம் கொடுத்து வாழ வேண்டும் என்பதையே அண்மைக்காலங்களாக வெளிவருகின்ற ஊடகச் செய்திகளும் மற்றும் அரச அதிபர் போன்றோரது கருத்துகளும் வெளிப்படுத்துகின்றன. மீளத் திரும்பிய பின்னர் இடம்பெறுகின்ற வன்முறைகளுக்கு பெண்கள் கலாசாரத்தை பாதுகாக்காது சீரழிக்கின்றமை மற்றும் அவர்களது செயற்பாடுகள் மாற்றம் அடைந்தமை என தொடர்ந்தும் பலரும் பெண்களை மரபுரீதியாக குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் பெண் சிறுமிகள் முதல் வயது வந்த பெண்கள் வரை தொடர்ச்சியாக குடும்பங்களில் துஷ்பிரயோகம் மற்றும் கொலை செய்யப்படுகின்றமைக்கு கலாசாரம் மட்டுமா காரணமாகிறது? இவர்களை அவர்களது குடும்பத்தில் உள்ள நெருங்கிய உறவுடைய ஆண்களே செய்துள்ளனர்: செய்து வருகின்றனர். ஆகவே இதற்கு யார் பொறுப்புக் கூறுவது? பதில் சொல்ல வேண்டிய சமூகமே பல சந்தர்ப்பங்களில் நியாயமான தீர்வை அணுகுவதை விடுத்து பாதிக்கப்பட்டோரை தொடர்ந்தும் அவர்களது செயற்பாடு தொடர்பாக விபரிப்பதால் பாதிப்புக்குள்ளானவர்கள் மீண்டெழ முடியாது இருக்கின்றனர். பெண்களுக்கெதிராக அவர்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் செயற்பாடுகளில் ஆண்கள் செயற்படும் போது கண்டு கொள்ளாமல் எம்மில் பலர் இருக்கின்றனர். அண்மைக் காலமாகப் பெற்றோர் கவனிப்பு இல்லாத அல்லது பெற்றோர் இல்லாத குடும்பங்களில் உள்ள பெண் பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி மோசடி வஞ்சக்கடத்தல் செய்வதோடு கட்டாயமாகப் பாலியலில் தொழிலிலும் ஈடுபடுத்தி வருகின்றனர். அத்தோடு மாற்றாற்றல் உள்ள யுத்தத்தால் அங்கவீனமான பெண் பிள்ளைகளை குறும்படங்களில் நடிக்க வைப்பதாகக் கூறி ஆண்கள் சிலர் அழைத்துச் சென்றுள்ளர். இவர்களது பாதுகாப்பிற்கு யார் பதில் கூறுவது? இவ்வாறாக மோசடி வஞ்சக் கடத்தல் செய்தோர் பற்றி அண்மையில் மருதானை காவல்துறைக்கு வந்த முறைப்பாடும் அதனூடாக மீட்கப்பட்ட சிறுமிகளது வாக்கு மூலமும் கவனிக்கத்தக்கது.

மேற்கூறப்பட்ட விடயங்களோடு கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு விடயம் என்னவெனில் வன்முறைச் சம்பவம் இடம்பெற்ற வீடுகளில் அந்த சம்பவம் தொடர்பாக பூரண விசாரணைகளை மேற்கொள்ள விரும்பாத தன்மை நிலவுகிறது. அதற்குக் காரணம் யாதெனில் குடும்ப மானம் போய்விடும் என்ற அச்சமும் அத்தோடு இனந்தெரியாதோர் எனக் குறிப்பிடப்படுவோரால் உண்டாகின்ற மிரட்டல்கள் மற்றும் அழுத்தங்களேயாகும். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் குழுக்களுக்கிடையே பிரிவினையை வலுப்படுத்துவதன் காரணமாகப் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரிக்கின்றன. காதல், திருமணம் என்ற பெயரில் பெண்கள் சிலர் ஏமாற்றப்படுதல், கொலை செய்யப்படுதல், கர்ப்பமாதல் எனக் கைக் குழந்தையோடு காவல்நிலையத்திற்கு அலைந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் பாதிப்பை உண்டாக்கியவர்கள் பாதுகாப்பாக நடமாடித் திரிந்து கொண்டிருக்கிறார்கள். பெண்களை வீடுகளில் கணவன் அடிப்பதையோ அல்லது துன்புறுத்துவதையோ நாளாந்த செயற்பாடாக அல்லது பழக்கப்பட்ட ஒன்றாகப் பார்த்தல் வேண்டும் என்றே எம்மில் பலர் எதிர்பார்க்கின்றனர். இந்த மனப்பாங்கே இன்று குடும்பங்களில் பெண்கள் கொலை செய்யப்படுவதற்கான மூல காரணமாகின்றது.

இதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் வன்முறை பற்றியும் அதன் புள்ளி விபரங்கள் பற்றியும் அறிவிப்புகள் வெளியாகிக் கொண்டிருக்கும் போது கூட அவற்றைத் தடுத்து நிறுத்த எந்த வழியும் நடைமுறைப்படுத்தப்படாமையானது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பெண்கள் தொடர்பான விடயங்களில் காவல்துறை தகுந்த நடவடிக்கை எடுக்காது ஆண்களுக்கு பக்கச் சார்பாகச் செயற்படுகின்றது. ஆண்களது குற்றச்சாட்டுக்களையே கவனத்தில் கொண்டு, பெண்களை அவர்களது நடத்தை தொடர்பாக விமர்சிக்கும் போக்கு வலுப்பெற முனைகின்றது. வழக்கு விசாரணைகள் நீதிமன்றங்களில் காலதாமதம் ஆகிக் கொண்டு இருக்கின்றன. சிலர் தமது அரசியல் பலத்தை தக்க வைப்பதற்கு வன்முறையை அதிலும் பெண்களுக்கெதிரான வன்முறையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். வன்முறையாளர்கள் ஊழல், இலஞ்சம், அதிகார மற்றும் மறைமுக மிரட்டல்கள் மூலம் தப்பித்துக் கொள்கின்றமை கண்கூடு. மறைமுக அழுத்தங்கள் காரணமாக செயற்படுத்தப்படும் வன்முறைச் சம்பவங்களினால் எதிர்காலத்தில் பெண்கள் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புப் பற்றி சிந்திக்க முடியாது போகின்ற நிலை தோன்ற வழியுண்டு. ●

# நள்ளிரவுப் பேய்களின் நாட்டிய நாடகம்

சிறிது கால இடைவெளி - ஆனாலும்
மறுபடியும்
புதிதான உத்தி
அதிகூடிய அடாவடித்தனம்
தொடங்கி விட்டது
நள்ளிரவுப் பேய்களின் நாட்டிய நாடகம்.
பச்சை உடுப்புகள்...
பவனி வருகின்ற அணிவகுப்புகள்...
இன்னும் இன்னும்...
நிறம் புலப்படாத
புதுப் புது வர்ணங்களில்
அலைந்து திரிந்தே
நடுநிசிப் பொழுதில்
இரவின் அமைதியைக் குலைத்தபடி
தனித்திருக்கும் பெண்களின் இருப்பிடம் நோக்கி
மாயமாய்...
மர்மமாய்...
இன்னும் பலவாறாய்...
இனிவரும் காலங்களில்
மேலும் தொடரலாம்
புதுப் புதுப் பெயர்களுடன்...



**Women's Action Network**
8/3 - 202, W.A. Silva Mawathe,
Colombo 06, Sri Lanka.
e-mail: tmwn2010@gmail.com

விலை ரூபா 25.00